# هل تريد السعادة باللغة التاميلية

# விமோசனத்தை தேடுகிறாயா?

எல்லாப்புகழும் அல்லாஹ்வுக்கே. சாந்தியும் சமாதானமும் கோமான் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது உண்டாகட்டும் !

சகோதரா! நிலையற்ற இவ்வுலகில் வாழ்கின்றாய் என்பதை நினைவிற் கொள். இது கலங்கலான கஷ்டங்கள் நிறைந்த வீடு. இது மு.ஃமின்களுக்கு சிறைக்கூடமாகவும், காபிர்களின் சுவனப்பூங்காவாகவும் இருக்கிறது என்பதே உனக்கு போதாதா!

சகோதரா! உன்னை நீ கேட்டுப்பார். உன் வாழ்வில் இன்னும் எவ்வளவு காலம் எஞ்சியுள்ளது? இன்னும் எவ்வளவு காலம் வாழ விரும்புகிறாய்? இருபது வருடமா, நாற்பது வருடமா? இரவு பகலாக மனிதருக்கேற்படும் திடீர் நிகழ்வுகளை, காணும் நீ இவ்வாறு ஆசைப்படலாமா?

சகோதரா! நன்கு சிந்தி! ஒரு ஹதீஸில் பொருள் பின்வருமாறு உள்ளது. நீ நாடியவாறு வாழ். நிச்சயமாக நீ மரணிப்பவனே! நீ நாடியோருக்கு அன்பு காட்டு, நிச்சயமாக நீ அவரை பிரிந்து செல்பவனே. நீ விரும்பியதை செய், நிச்சயமாக நீ அல்லாஹ்வை சந்திப்பவனே" இப்போதேனும் நீர் இந்தச் சோதனையின் பயங்கரத்தன்மையை அறிகின்றீரா.

சகோதரா! மலகுல் மவ்த், நீ இருக்கும் இந்நிலையில் உன்னிடம் வந்ததாக வைத்துக்கொள். நீ இருக்கும் நிலையில் அவர் உன் (உயிரை எடுக்க) வருவது உனக்கு மகிழ்ச்சி தருமா!

சகோதரா! கப்ரிலே நீ தங்கப்போகும் முதலிரவை நினைத்துப் பார்த்தாயா? அங்கு நீ மாத்திரமே. எல்லாப்புறமும் உறுதியாக மூடப்பட்டு கப்ரிலே இருக்கும் ஜந்துக்களும் பூச்சிகளும். உன்னை ஆட்கொண்டு விடும். மண் உனது விரிப்பாக ஆகிவிடும். உன் அழகும் கவர்ச்சியும் போய்விடும். சகல இன்ப சுகங்களும் பறந்து சென்று கவலையும் கஷ்டமுமே எஞ்சி நிற்கும்.

சகோதரா! பாவத்தில் மூழ்கியிருக்கும் நீ, சுவனத்தையும், அதிலுள்ள இன்ப சுகங்களையும் விரும்புகிறாயா? அல்லது ஷைத்தானினதும் அவனுடைய கூட்டத்தாரினதும் நேசனாக இருக்கும் நீ ஈருலக விமோசனத்தில் ஆசை வைக்கிறாயா?

சகோதரா! சிலர் தமக்கு அல்லாஹ் வழங்கியவற்றை வைத்துக் கனவுகாண்கின்றனர். என்றாலும் 'நிச்சயமாக அல்லாஹ் கடும் தண்டனை வழங்குபவன். நிச்சயமாக அவன் யாவரையும் மிகைத்தோனாகவும் பழி வாங்குபவனாகவும் இருக்கின்றான். என்பதை மறந்து வாழ்வோர் அல்லாஹ்வின் அருளுக்கு உரியோராக தம்மை ஆக்கிக் கொள்ளாதவர்கள். என்றாலும் அவர்கள் அல்லாஹ்வின் கோபத்தையும் நோவினை தரும் தண்டனையையும் தேடித்தரும் கருமங்கள் செய்தோராவார்.

சகோதரா! நீர் உலகில் விரும்பிய சகல இன்பங்களையும், உலக ஆசா பாசங்களையும், செல்வங்களையும் பெற்றதாக வைத்துக் கொள். ஆனால் இறுதி முடிவு நரகமாகவே இருக்கும். நீ நரகக் கிடங்கிலிருந்து கொண்டு உலகில் அனுபவித்த இன்பங்களை நினைவிலெடுக்க முடியுமா?

சகோதரா! உனக்கெதிராக சாட்சிகள் கூறும் நாளை சிந்தித்துப்பார். உன் அவயவங்கள் உனக்கெதிராக சாட்சி கூறி உன்னைக் கேவலத்துக்குள்ளாக்கும். அவ்வேளை நீ எங்கு ஒழிந்தோடலாம்? உனக்கெதிராக சாட்சிகள் உன்னிலிருந்தே தோன்றும். பலவீனமான மனிதா? சிந்தித்துப்பார்! அல்லாஹ்வுக்கு மாறு செய்ய நீ பயன்படுத்திய உறுப்புகளே உனக்கு எதிராக சான்று பகரப்போகின்றன.

சகோதரா! இதுவரை உன் வாழ்க்கையை நீடித்துவிட்ட அல்லாஹ்வை போற்றுவாயாக. நீ அவனை மறந்திருந்து பாவங்களையும் அட்டகாசங்களையும் செய்த போதும் உன்னுயிரைக் கைப்பற்றாது விட்டிருக்கிறானே. அவனைப் புகழ்.

சகோதரா! அதிசீக்கிரம் தவ்பா (பாவமன்னிப்பு) செய்வதில் ஈடுபடு. அல்லாஹ்வை மறந்து வாழும் குணத்தை எடுத்தெறி. தவ்பாவின் வாயில் திறந்தே உள்ளது என்பதை அறி. உன் இறைவனின் அருட்கொடைகள் வழங்கப்பட்டு கொண்டே இருக்கின்றன. அது காலையும் மாலையும் கிடைத்துக் கொண்டேயிருக்கும். தவ்பா செய்பவன் பாவமற்றவன் என்பதை அறி. நிச்சயமாக அல்லாஹ் உன் தீய செயல்களை நற்செயலாக மாற்றுவான். நீ தவ்பா செய்வதைக் கண்டு அல்லாஹ் சந்தோஷப்படுகிறான்.

இறுதியாக தவ்பா செய்வோருக்கு சுப சோபனமும் அல்லாஹ்வின் அன்பும் கிடைக்கட்டுமாக. நிச்சயமாக அல்லாஹ் தன்னிடம் பிழை பொறுக்க தேடுவோரை நேசிக்கிறான். மேலும் தூய்மையோடு இருப்போரையும் நேசிக்கிறான். அல்லாஹ்வே சகலதையும் அறிந்தவன். எங்கள் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது அல்லாஹ் ஸலவாத்தை சொரிந்தருள்வானாக.

தமிழில்: மவ்லவி முபாரக் மதனி
(அதிபர் கபூரியா அரபிக் கல்லூரி இலங்கை)